# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2015.11.24

**ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 14/2015**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**<u>U-EX I (II) மற்றும் அதிலும் உயர்ந்த சம்பளக் குறியீடுகளைக் கொண்ட பதவிகளை வகிப்பவர்களுக்கு கைப்பெட்டி (Briefcase) வழங்குதல்</u>**

2011.09.01 ஆம் திகதிய 964 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. U-EX I (II) மற்றும் அதனைவிடவும் உயர்ந்த சம்பளக் குறியீடுகளைக் கொண்ட பதவிகளை வகிப்பவர்கள் ஐந்து வருடங்களுக்கொருமுறை தமது செலவில் கைப்பெட்டியொன்றை (Briefcase) கொள்வனவு செய்து அதற்கான பற்றுச் சீட்டை சமர்ப்பித்து கைப்பெட்டியொன்றுக்கு (Briefcase) ரூபா 5,000/- இற்கு மேற்படாத தொகையை மீளப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவர்கள் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

3. ஐந்து வருடங்களின் பின்னர் கைப்பெட்டியை (Briefcase) மீள ஒப்படைக்க வேண்டிய அவசியமில்லையெனவும் தீர்மானிக்கப்பட்டது.

4. 2011.09.01 ஆம் திகதிய 964 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய தற்போது கைப்பெட்டி (Briefcase) வழங்கப்பட்டிருக்கும் ஊழியர்கள், அவர்கள் கைப்பெட்டியை (Briefcase) பெற்றுக்கொண்ட திகதி முதல் 05 வருடங்கள் பூர்த்தியடையும் வரை இந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம் கைப்பெட்டியை (Briefcase) பெற்றுக்கொள்வதற்கான உரிமையைப் பெற்றுக்கொள்ள முடியாது.

5. 2011.09.01 ஆம் திகதிய 964 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

6. இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2015.12.01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

தயவுசெய்து இதன் பிரகாரம், நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா**

**தலைவர்**

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள/ சிரேஷ்ட உதவி நூலகர்கள் / உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/6/1/2